**சென்னை–6, தொழிலாளர் துணை ஆணையர் (பணிக்குழு மற்றும் பொது) அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர்: திரு. மோ. மு. கமலக்கண்ணன்., எம்.காம்., எம்.பில்., எம்.பி.ஏ.,**

**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. க. மகேஸ்வரன், இளநிலை உதவியாளர், தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை–6 – 24.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை அரசால் செய்யப்பட்டது – தகுதிகாண் பருவத்தில் வைத்தல் – ஆணை – வெளியிடல்.

---

ஜி3/15261/2016

நாள்: 04.09.2020.

படிக்கப்பட்டது

1. அரசாணை (4D) எண். 04, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (இ2) துறை, நாள்: 05.08.2020.
2. தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் சிறப்புவிதிகள், விதி 34 உடன் பிற்சேர்க்கை V.

********

ஆணை :

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணை மூலம் சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. க. மகேஸ்வரன் என்பவரின் பணியினை 24.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, அன்னாரை 24.09.2018 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், அன்னார் பணியில் சேர்ந்த 24.09.2018 முற்பகல் முதல் தொடங்கும் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

தனியருக்கு தகுதிகாண் பருவ காலத்தில் அன்னார் பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும், மேலும் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

அன்னாரின் பணி முன் தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், அவற்றினை நடைமுறையில் உள்ள விதிகளின்படி, பெற தகுதியுடையவராகிறார் என்றும் அரசாணையின்படி உத்தரவிடப்படுகிறது.

இதனால் எழும் நிலுவைத் தொகையினை அன்னாருக்கு பெற்று வழங்க இவ்வலுவலக நிர்வாக அலுவலர் (குறைந்த பட்ச ஊதியம்) அவர்கள் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/– மோ. மு. கமலக்கண்ணன்
தொழிலாளர் துணை ஆணையர்
(பணிக்குழு மற்றும் பொது)

பெறுநர்
திரு. க. மகேஸ்வரன்,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

நகல் :

1. சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை.
2. நிர்வாக அலுவலர் (குறைந்த பட்ச ஊதியம்), இவ்வலுவலகம்.
3. இவ்வலுவலக 'ஆர்' பிரிவு மற்றும் 'ஜி4' இருக்கை.

//அனுப்பப்படுகிறது//

4.9.2020

தொழிலாளர் துணை ஆணையருக்காக
(பணிக்குழு மற்றும் பொது)

சுருக்கம்

பணியமைப்பு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.க.மகேஷ்வரன் – கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணி நியமனம் – பணி வரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (இ2)த் துறை**

அரசாணை (4D) எண். 04

நாள்05.08.2020
சார்வரி வருடம், ஆடி 21
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. திருமதி.க.வசந்தி என்பவரின் விண்ணப்பம் நாள் 21.1.2016.
2. திரு.க.மகேஷ்வரன் என்பவரின் விண்ணப்பம் நாள் 21.01.2016.
3. தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண்.ஜி3/15261/2016, நாள் 14.09.2018.
4. தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ஜி3/15261/ 2016, நாள் 24.03.2020.

------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவண்ணாமலை தொழிலாளர் அலுவலர் (ச.பா.தி) அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது 24.01.2014 அன்று மரணமடைந்த திரு.க.கஜேந்திரன் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.க.வசந்தி என்பவர் அவரது மகன் திரு.க.மகேஷ்வரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி வழங்குமாறு விண்ணப்பித்திருந்தார். மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திரு.க.மகேஷ்வரன் என்பவரும் கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்குமாறு கோரியிருந்தார்.

2. திரு.க.மகேஷ்வரன் என்பவரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயலாணையின் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு 24.09.2018 அன்று முற்பகல் முதல் தனியர் அப்பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.க.மகேஷ்வரன் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 24.09.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, காலஞ்சென்ற திரு.க.கஜேந்திரன் என்பவரின் மகன் திரு.க.மகேஷ்வரன் என்பவருக்கு தொழிலாளர் துறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 24.09.2018 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. தனியரின் பணி முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றினை நடைமுறையில் உள்ள விதிகளின்படி பெறத் தகுதியுடையவராவார்.

6. இவ்வரசாணை இத்துறையின் 'க்யூ' பிரிவு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அ.சா.எண்17617/ஜி2/2020–1, நாள் 28.07.2020.–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
திரு.க.மகேஷ்வரன், இளநிலை உதவியாளர்
(தொழிலாளர் ஆணையர், சென்னை –6 அவர்கள் வழியாக)
தொழிலாளர் ஆணையர், சென்னை–6.

நகல்:
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ/அநமு.2) துறை, சென்னை–9.
சுத்த நகல் கோப்பிற்கு (7660/இ2/2020)
இருப்புக் கோப்பு / உதிரிநகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**